91

OFFICE OF THE ... 10 OCT 1911 MADRAS.

உ

சிவமயம்.

# திருமுகவிலாசம்.

பணிமலைக்காவலர்

# அபிஷேகமாலை.

91
4 · 1911

இது

திருச்செங்கோடு

விவேகதிவாகரன் பத்திராதிபர்

ஸ்ரீமான்

தி. அ. முத்துசாமிக்கோனாரவர்களால்

பரிசோதித்து,

கவுண்டன்பாளயம்

மகா-ள-ள-ஸ்ரீ இராஜாக் கவுண்டர்,

கி. மு. நல்லய்ய கவுண்டர்,

திருச்செங்கோடு

அ. பழனியப்பப்பூசாரி

இவர்கள் கேட்டுக்கொண்டபடி

தமது

விவேகதிவாகரன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சேலம்.

1911.

Q2 : 417
N11
121075

உ

சிவமயம்.

91
4.1911

# பதிப்புரை.

---

"திருவளர் பொதியத் தொருமுனிபாதம்
வருக சிறியேன் சிரமிசை யுறவே"

இத் திருமுகவிலாசம் சேமூரிலிருந்த "நல்லயன்" என்பவன் கேட்டநூலென்று காப்புச் செய்யுளிலும் நூன் முடிவிலும், இந்நூலின் 115, 117, 118, 119-எண்ணுள்ள பாக்களால் வேளாளனென்றும், 116-ல் தலைசை (தலையநல்லூர்) நசையாபுரி (நசையனூர்)ஐ உடையவனென்றும், 114-ல் ராஜனருள் புத்திரனென்றுங் குறிப்பிட்டிருப்பதால், கூறை குலத்தானென்றுந் தோன்றுகின்றது. சண்பக மஹாதேவி என்னும் பதியிலெழுந்தருளியிருக்கும் "இராஜா" என்னுந் தெய்வத்தைப் பூசிப்பவர்களாய் மூத்த பிள்ளைகளுக்கு "இராஜ" என்னும் பெயரை யிடுபவர்களாய், சேமூர் வமிசத்தார் என்று கூறுகிறவர்களாய்த் தலையநல்லூர் நசையனூர் முன்காணியாகவுள்ளவர்களா யிருப்பவர்கள், மானத்தி புத்தூர் வகை மிட்டா ஜமீன் குடும்பத்தினரேயன்றி, இத் திருச்செங்கோட்டுக்குச்சமீபத்துள்ள இராஜாக்கவுண்டன் பாளயத்து மிருப்பதால் இந்நூலைக்கேட்டுக்கொண்டவன் சேமூரிலிருந்த கூறைகுலத்து இராஜக்கவுண்டன் மகன் நல்லய்யகவுண்டன் என்றே சொல்லலாம். இன்னோன் சில பாக்களும் சிறு பிரபந்தங்களும் கேட்டுளானெனச்சிலர்கூறுகிறார்கள். இந்நூல் திருச்செங்கோட்டு நாகமலைமீதும் சுற்றிலும் நகரிலுமுள்ள விநாயகர் முதலிய தெய்வ சொருபங்களையெல்லாம் அரிதிறைந்து மிருந்த பழக்கமுள்ளவரால் பாடப்பட்டதென்று சொல்லாமேயமையும். இந்நூலிற் குறிப்பிட்டிருக்கும் சிலசொரூபங்களைப்பற்றிக்கேட்டால் அருச்சகர் முதலானபேர்களும் சற்று யோசித்தே இருக்கின்றதென்கிறார்கள். இவ்வித அருமைவாய்ந்த நூலையியற்றியவரைத் தெரிந்துகொள்ள முயற்சித்துவந்தேன்.

171075



கல்வி கேள்விகளில் சிறந்து கொங்குப்புலவர்கள் என்னும் வகுப்பாரில் அக்கிரகண்ணியம்பெற்றுவந்த குடும்பமாகிய ம-ா-ஸ்ரீ சுப்பிரமணியப்பூசாரி வீட்டில் பழய புத்தகங்களிருப்பதாக கேள்வியுற்று அவற்றை பார்க்கவேண்டி இருபது வருஷகாலமாகப் பிரயத்தனித்து வந்தேன். தெய்வகிருபையால் இன்று இணங்கினார்கள். எனக்கவசியமான சில புத்தகங்களிருந்தன. அவற்றுள்ளே "திருமுகவிலாச" ப்பிரதி ஒன்றிருந்தது. "வீமணக்கவிராயன்" இயற்றியதெனக் கண்டிருந்தது. இப்பிரதி வைத்திருந்த குடும்பத்தின் முன்னோரில் ஒருவனே வீமணக்கவிராயன். இவனாலும் இவன் சந்ததியாராலும் இயற்றியநூல்கள் சில உண்டு என்கிறார்கள். இந்நூலின் 18-வது பாராவில் சண்பகவிருக்ஷ பிரஸ்தாபமுறுவதாலும், அம்மரம் சஹஸ்திரலிங்கத்தருகில் இற்றைக்கு 100-வருஷத்தின்முன் இருந்ததாகப் பெரியோர்கள் கூறுகிறார்களானதாலும், அதன் பின்னிட்டான கட்டடங்களும், பிம்பங்களும் இதிற் கூறப்படாமையாலும் இந்நூல்செய்து சுமார் ஆயிரம்பிறைகள் கண்டிருக்கலாமெனத் தெரிகிறது.

இத்தலத்துள்ள கட்டடங்களையும் தெய்வசொரூபங்களையும் வரிசைபெற விவரம் தெரியவிரும்புவோர்களுக்கும் தல உபாசகமாய்ப் பாராயணஞ்செய்யக் கருதுவோர்களுக்கு சிற்றளவிலேனும் பேரளவிலேனும் இதுபோலொத்த பிறிதொருநூலிருப்பதாக இன்றுகாறுங் காணப்பெறாமையாலும், இது மாய்ந்துபோகாவண்ணம் அச்சிட்டுலகுக்குபகரித்தல் பெருநலமாமென்று என் கண்மணிபோன்ற ஸ்ரீலஸ்ரீ சா. நாககிரிபண்டிதரவர்கள் அடிக்கடி தூண்டும் நற்பணியை மறுத்தற்கின்றி இதனையச்சிடத் துணிந்தேன்.

அனுபவமுதிர்ந்த விவேகிகள் இப்பதிப்பின் பிழைகளையும் அவற்றின் திருத்தங்களையும் அன்புடன் தெரிவிப்பார்களென விரும்புகிறேன்,

சோபகிருது-ஹு ஆவணிமீ 24-உ

தி. அ. மு.

உ

சிவமயம்.

# திருமுகவிலாசம்.

## காப்பு.

நேரிசை வெண்பா:

மருவுலவு சேசூர் வருநல் லயன்மேற்
திருமுக விலாசமொன்று செப்ப - அருளின்
நலமிகுந்த கோகநக னுவகலா துற்ற
கலைமகளே நீயிதற்குக் காப்பு.

1866
89ஏ - 8M
Q2 : 417
N11

கலிவெண்பா.

1. சீர்பெற்ற நாகச் சிகரிவந்திக் கல்மீதி
வேர்பெற் றிடும்பாண்டி யீசுரரும் - பேர்பெற்ற

2. நந்தீ சுரரும் நலந்தருபாண் டிச்சுனையுஞ்
சுந்தரஞ்சே ருங்குமர சுவாமி யுறை - சந்ததமுஞ்

3. சொற்குமர தீர்த்தமன்பர் தோத்திரஞ்செ யைவர்குகை
பொற்பிலகு காஞ்சி புரவழியாம் - நற்பிலத்து

4. வாரங் களிறு மகத்துவஞ்சேர் கற்றவளை
சேருஞ் சுனையதிக தீர்த்தமுமா - மாருந்

5. துதிபுரியா ருஞ்சுனையுஞ் சொல்வளஞ்சேர் கூனர்
கெதியெனவே வாழ்ந்த கிடையும் - நதிசேர்

6. வருமுரு கேசர் வளர்பார்ப் பதியுந்
திருநந்தி மாநாக தீர்த்தம் - கருதரிய

7. தாதுசெறி நாகதீர்த் தங்கிழக்கு வாயின்மதில்
கோதகற்றுங் கந்தர் கொடிக்கம்பம் - ஆதி

8. குமரீசர் குன்றீசர் கோகநகன் போற்ற
அமருமதி தேசிச ரானோர் - அமரர்தொழும்

9. தாண்டவரும் பத்திரையுஞ் சாரும்விலா சத்தருகி
லாண்டவிசு வேசர்விசா லாட்சியம்மன் - வேண்டுந்

10. திருவாசி யைங்கர னுஞ் தேவிசத்த மாதர்
முருகா ரறுபத்து மூவர் - அரிய

11. இசையோது மூவ ரிறைவர் நாகேசர்
திசைசேர் கலியுகமால் சேர - உசிதநறு

12. வாசமலர் மாது மகிமாது சூழாதி
கேசவமா லன்பர்வினைக் கேடகற்றித் - தேசுதரு

13. நல்லீ சுரர்நந்தி நற்றிருக்கூட் டத்திரளின்
சொல் விளயான் தும்பிமுகத் தோன்றந்தை - யில்லருளும்

14. பஞ்சலிங்க நாதர் பகர்பச் சிமவாசல்
மிஞ்சுமரு ணாகம் விசு வேசர் - மஞ்சுகுழல்

15. சேரும்விசா லாட்சி தேவர்மகிழ் சம்பிலிங்க
ரோரிருவ ரான உபயலிங்கம் - நேரில்

16. அதிமதுர வாக்கா லருந்தமிழ்ப்பா வன்பர்
நிதம்புனை யுஞ்சகஸ்திர லிங்கம் - மதனமுறு

17. பாற்கடலுற் றுத்துப்ர பன்றனைவே ட்டுக்கலங்கி
னோற்றதௌவை யென்று நுவல்வாளும், - மேற்கங்கைத்

18. தண்முடிக்குப் புட்பமருள் சண்பகம நேகநா
ளெண்ணும் ருசிசே ரிலுப்பை மரம் - பண்ணிசைந்த

19. சத்ததா ளத்துடனே தாபேக்கி யேநடனஞ்
சித்தம் பரத்தி லன்று செய்த சிவம் - குற்றமெலாந்

20. தீர்க்கும் புகழ்பிரம தீர்த்தமெனு முட்சுனையும்
பார்க்கு மடியார் பவமகல - நீற்றையள்ளி

21. வில்லார் பொழிற்சபையின் வித்தக வெனச்சூர
மெல்லா மருந்துமிட பேசுரனும் - சொல்லார

22 வோங்கு துசக்கம்ப முற்றபலி பீடம்
பாங்கான வஷ்டதிக்குப் பாலகரும் - தாங்கலிரு

23. நான்குமா நாகமெட்டு நாடரு மோர்கமடந்
தாங்குவிமா னங்கவிழுந் தாமரையும் - பாங்கு

24. செறியும் பலகணியுஞ் சேர்த்வார பாலர்
அறிவுதரு வேழமுக ஞானென் - பொறிபரவு

25. கம்மைந்து சேரரவு கன்னிவிசு வேசுரனர்
அம்மைவிசா லாக்ஷியுய ராதித்தன் - மென்மைதரும்

26. உள்ளங் களிக்க உயர்சிறுத்தொண் டன் மனையிற்
பிள்ளைக் கறியுண்ட பெம்மானுந் தெள்ளுதமிழ்

27. சுந்த்ரமல்லி கார்ச்சுனலிங் கேசர்பொரு சூர்பிளவாய்ப்
வந்தமயில் வாகனனும் வாகான - சிந்தை

28. பிரிய மிருந்ததனற் பிஞ்ஞகன்ருள் சேர்ந்த
பரிவுபெறுந் த்வார பாலர் - கருவகற்றுஞ்

29. சித்திவி நாயகனென் சென்ம வினையகற்றும்
வெற்றிபெறு முத்தி விநாயகனும் - இத்தலத்திற்

30. கங்கைசுத னறுங் கடம்பணிபு யன்மகவான்
மங்கை தெய்வ யானைகுற மாதிருவர் - பங்கி

31 னுறைகுமர சாமியரு ளுற்றிடலிங் கோற்பவமும்
இறைதட்சி ணமூர்த்தி யென்னும் - நிறையருள்சேர்

32. நாரி கணபதியு நற்கமல மண்டபமு
மேரணியு நிர்த்தநந்தி யீசுரனும் - பேர்காஞ்சி

33. நன்னதியிற் பூசைபுரி நாரிக் கொருபாகந்
தென்னுக வெற்பிலருள் தேசிகனு - மங்காளில்

34. தெண்டிரையி னஞ்சையுண்டு தேர்மேற் பவனிவரு
மண்டர் தொழவெழுந்த வாண்டவனுங் - கண்டுதொழு

35. தேற்றுசண் டேச னெழில்பெற்ற கோபுரத்தில்
வீற்றிருக்குந் தொந்தி விநாயகனும் - மேற்றிசையிற்

36 சுந்தரஞ்சேர் வால சுப்ரமண்ணி யக்கடவு
ளிந்திரதீர்த் தங்கருணை யெய்துமே - வந்தனைசெய்

37. நம்ம கணபதிதீர்த் தம்பாவ நாசமுல
கம்மதிக்கு மாதிசுர கண்டீசர் - இம்முடிகொள்

38. நல்லதம்பிக் காங்கேய னண்ணுமிளைப் பாறவிசை
புல்லுமண்ட பத்தங்கைப் புத்தேளும் - நல்லசிவ

39. தீர்த்தநொச்சி பைங்கரனுஞ் செட்டிகவுண்டன் றார
னேத்தும் புழைக்கை யிறையோனும் - கீர்த்திபெறு

40. கோட்டைவா சற்படியுங் குகையுங் கணபதியும்
வாட்டவா துற்ற வயிரவனு - மீட்டமிகு

41. தீர்த்த மபிஷேகஞ் செய்யும் சிவலிங்கங்
கார்த்திகே யன்சுனையெக் காலமுமே - சேர்த்திமிகு

42. மூங்கிலடித் தந்தி முகனறுப தாம்படிவேல்
தாங்கி நெளிபைந் தலை நாகம் - காங்கயனும்

43. சத்தியவான் மாராட் சதக்கவுண்டன் மண்டபத்தி
லத்திமுகன் மஞ்ஞையுற்ற வாறுமுகன் - சித்திபெறு

44. மாதேச லிங்கம் வருபிணியெ லாந்தீர்க்கு
மாதர்மகிழ் காங்கேயர் மண்டபமும் - கோதிலாச்

45. செங்குந்தர் மண்டபத்திற் சேய்வீர ரொன்பதின்மர்
அங்குசபா சங்கொண்ட வைங்கரனும் - இங்கிதஞ்சேர்

46. பேழைக்க லைங்கரன்பேர் பெற்றதொண்ணூ றும்படிக்கீழ்த்
தாழும் நெளிபைந் தலைநாகம் - ஊழகற்றுங்

47. சங்கை யமுனை கதித்த சரசுவதியாந்
துங்கமுறு மூன்றிச் சுயதீர்த்தம் - கங்கையருள்

48. நற்குமர வேள்பாதம் நாதரரிக் கோர்சுதனு
யுற்பவித்த வீர முறு சாத்தன் - அற்புதமாய்ச்

49 சொன்னமருள் வீரே சுரன்மலையிற் றென்முகமா
யென்நாளு மவாழ்பெருநந் தீசுரனும் - பொன்னுன

50 வீரவி நாயகனும் வேர்வையழற் கண்பிறந்த
பாரோர்புகழ் வீர பத்திரனும் - பேரான

51. மாதவத்தோர் நாளு மகிழுபய மண்டபமுந்
தீதகற்று மாதி சைவ தேசிகர்செய் - சோதிமுதல்

52. மண்டபத்தின் றன்னருகில் வாழும் பசுபதியார்
பண்டான மூலப் பழம் பொருளுங் - கண்டுதொழுஞ்

53. சத்தகன்னி மார்கள்கீழ்த் தந்தி முகப்படியுங்
குற்றமற்ற வாலின் குறுமுனியும் - இத்தலத்தில்

54. வாணியர்க ளுண்டுசெய்த மண்டபத்தி லைங்கரனுஞ்
சேணுடர் வந்துதுதி செய்யுமெழில் - வேணி

55. யழகியவி நாயகனு மாறுமுக வேலர்
மழைவிழித்தெய் வானைகுற மாதும் - அழகுமதி

56. சூடும் பிரானுதவும் தொந்தி வயிற் றுக்கரியும்
ஆடல் புரி வேம்படியி லைங்கரனுந் - தோடுசெறி

57. சிந்துரத்தின் றன்னருகிற் றேவேந்த்ர வைங்கரனுந்
தந்திநிறை கண்ட தனவசியர் - சுந்தரஞ்சேர்

58. மண்டபத்துக் குஞ்சரமும் மால்சிர் கருணீகர்
கண்ட வெழிலங் குசக்கையனுந் - தண்டமிழ்க்கு

59. மாணிக்கந் தந்ததொண்டை மண்டலத்தோ ராம்பல்முகன்
ஆணிப் பொன் னூர்முளசை யானைமுகன் - வேணிப்

60. பிராணே நிகர்சுப் பிரமணிய வைங்கரனும்
அராவணிச தாசிவ வைங்கரனும் - புராரியெனும்

61 நாககிரி யைங்கரனும் நால்வேத வைங்கரனும்
ஆகமர்த்த நாரீச வைங்கரனும் - ஓகையுடன்

62 ஞானனு பூதியிசை நன்மார்க்கம் நான்குமருள்
சேனுப திக்கணப தித்தேவும் - யோக

63 கவரைக் கணபதியுங் கற்றவர்கள் நெஞ்சத்
தவமகற்று செங்குந்த வாம்பல்முகன் - புவனிபுகழ்

64 நிர்த்த கணபதியு நீள்தில்லை யைங்கரனும்
அத்திமுகன் காரைக்காட் டைங்கரனுஞ் - சித்தமன்பா

65. யாபத்துக் காத்தவரு மன்பாய் நடுக்கூவ
மேவி வளர்கின்ற விநாயகனும் - பூவில்

66. வருவைத்திய வைங்கரனும் மாதவத்தோர் போற்று
மரசடிவி நாயகனு மன்பாய் - குருவுலவு

67. பாங்கான வைங்கரனும் பானல் மலர்செறியுங்
கோங்காரு மம்மன் குளத்தருகில் - ஓங்கார

68. மேமிகுந்த டாகினியு மேற்றரிய சாகினியுந்
தாமிருவ ரும்மேவல் தான்புரிவோர் - நேமியணி

69. நாரணியா மன்றுசிவ ஞருடனே வாதுபுரி
ஆரணிந்த கோதை யழகியம்மன் - வீர

70. மிதுங்காளி கூளி விலகாமல் நாளுஞ்
சுகபெறவே போற்றித் துதிப்பார் - உகம்பலவே

71. தந்தசந்தைப் பேட்டை தனிலுறைந்த வைங்கரனு
மந்தமிகு புண்ணியதரு வைங்கரனும் - நந்தா

72. வனத்தத்திக் குட்டையின்கிழ் வாழுங் கரியுஞ்
சினத்தெப்பத் தின்குளமுஞ் சீராய்த் - தனமுதவுஞ்

73 செங்குந்தர் மண்டபத்திற் சேர்ந்த கரிமுகனுந்
தங்கு மெகினத் தருவடியி - லிங்கிதஞ்சேர்

74 செல்லவி நாயகனுஞ் செய்யவன்மீ கத்திலுறை
நல்லகம்மைந் துற்றுவளர் நாகமுமே - சொல்லரிய

75. கண்ணணூர் மாரி கதித்த கணபதியுந்
தண்ணார் வயிரவன் சாவடியி - லெண்ணவளர்

76. வேழ முகன்மதுரை வீரன்பட் டத்தலேச்சி
மாழை யிளையான் மதகசமும் - வாழ்பெரிய

77. தேரடிவி நாயனுந் தென்கைலே யென்றுசொன்ன
பேர்கள்மிடி துன்பப் பிறவிவினை - தீர

78. அனுப்புமருள் மண்டபமு மாறுமுக னுளிற்
கனத்த சுடர்த் தீபக்கற்கம்பம் - நினைத்த

79. படிமுடிக்கு மைங்கரனும் பாருலகை யாளும்
வடிவார் தளகர்த்தர் மண்டபமும் - மடியவிடு

80. மூகை மதலை மொழிபுகலச் செய்யன்னத்
தியாகர்குல மண்டபத்துச் சிந்துரமும் - நாகமுயர்

81. பொற்கோ புரமும் புனிதவன்பர் போற்றி செய்யும்
வெற்றிமுக் குட்டு விநாயகனும் - கற்புமிகு

82. சத்தகன்னி ஞானந் தருதக்ஷி ணமூர்த்தி
முத்தி பெறுமறுபான் மூவர்களும் - இத்தலத்திற்

83. கங்கையருள் முக்கணனுங் காரைக்கா லம்மையுடன்
மங்களஞ்சேர் நாயகனார் மண்டபமுந் - துங்க

84. மிகுவெதிரி யைங்கரனு மிக்கபஞ்ச லிங்கம்
பகரரிய லிங்கோற் பவமுஞ் - சகமதனைச்

85. சிட்டிக்கும் நான்முகனைத் தேவர்களெல் லாமறியக்
குட்டிச் சிறைசெய் குருபரனுஞ் - சட்டமிடு

86 துற்கை நிர்த்த மண்டபமுஞ் சுகந்த விநாயகனும்
வெற்பரயன் தந்தருளு மெல்லியலாம் - கற்புமிகு

87. மாது சுகந்தமிகு வல்லிசொக்கர் பள்ளியறை
யாதிமீ நாக்ஷியென்னு மம்பிகையுந் - தாதுசெறி

88. வான நயினீசர் வரமுதவு காசிலிங்கந்
தேனெனுமா தித்தன் சிகரியடி - ஆனைமுகன்

89 நந்திகூ பத்தி னடுவினுறை வேழமுகன்
நந்திபலி பீடமுயர் நன்மதிலுஞ் - சுந்தரஞ்சேர்

90. நாரி கணபதியும் நாதரடி யர்ச்சிக்கப்
பாரில்வரு துவார பாலகரும் - மேருச்

91 சிலை வளைத்து முப்புரந்தீ சேர நகைசெய்து
கொலைபுரிந்த வேடனையாட் கொண்டு - கலையரவு

92. பாணிமுடி சூட்டும் பரமர்கயி லாயலிங்கர்
சேனுலகோர் போற்று சந்த்ர சேகரரும் - நாணவட

93 பத்திரைமு ன்னிர்த்தமிடு பத சபாபதியார்
சத்தி சிவகாமியெனுந் தற்பரையுஞ் - சுத்தமனச்

94. சண்டே சுரனுந் தழைத்த வயிரவனும்
வண்டமிழ்சேர் நான்குதூண் மண்டபமும் - பண்டுநாள்

95. வந்தகே தாருடையர் மண்டபத் திலங்கரனும்
இந்திரதரு மாநகைக் கிறைவருறை - சுந்தரஞ்சேர்

96. மண்டபத்தி லங்கரனும் வல்லபைபா கக்கடவுள்
அண்டர் திருவட்ட வைங்கரனும் - பண்டொருநாள்

97. எத்திசையும் பேர்விளங்க வேயக் கினிமூழ்கிச்
சத்தியென வந்தநல்ல தங்கம்மன் - சுத்தமயி

98. லாண்டி குகை யைங்கரனு மண்ணல்வில்வ வைங்கரனும்
பாண்டவர்க ளூற்றுபச்சைப் பாழியுமே - நீண்டபொரு

99 ளோம்பாழி தன்னுடனே யுரகசிரியடியார்
தேம்பாயுந் தாமரைகள் சேர்தடமும் - பூம்பொழில்கள்

100 சூழாவக் குன்றுகளைச் சுற்றுமுள தூர்க்கைமின்னூர்
வாழுங் கடலாத்தி மாதருவின் - நீழலுயர்

101. வாலறையில் நாளும் வளர்ந்த ஜடாமுனியுந்
தாலமகிழ் தானத்தார் தன்குளமுஞ் - சேலுலவும்

102. நற்பெரியக் காள்குளமும் நாவலர்கள் போற்றிசெய்யும்
பற்குணன்வாழ் சித்தாடு பாழியுமே - சற்புகழாய்ச்

103. சந்ததம்வாழ் கந்தப்பன் றந்திமுக வைங்கரனுங்
கந்தரஞ்சேர் நாகமலை காவலராய் - வந்தவர்கள்

104. சிந்தூரமு கன்வெற்றி சேரசுப தித்துரையும்
செந்தமிழோ துங்கசப தித்துரையு - மிந்திரனுக்

105. கொப்பான வீமனனு முயரோபணன்கீர்த்தி
யெப்போது நாட்டு மிரங்கணனுங் - தப்பாத

106. கற்புமிகு முத்தம்மன் காசினியெ லாம்போற்று
பற்பினிமா தான பவளம்மன் - பொற்பினிய

107. வாலைக்குயிலெனவே வந்தவோ பம்மனுடன்
தாலக் கறுப்பணனுந் தான்தயவாய் - கோலமால்

108. மெச்சுமரு கன்பாரி வேட்டைமண்ட பத்திலுறை
அச்சமிலா நற்ப்ரசன்ன வைங்கரனு - முச்சிதஞ்சேர்

109. வேட்டைப்பா றைக்கூவிளத்தருக்கீழ் வாழ்ந்தவொற்றைக்
கோட்டைப் படைத்தவெள்ளைக் குஞ்சரமும் - ஈட்டமிகு

110. முத்துநாய்க் கன்கூவ முன்னமுறை மண்டபத்தில்
வத்துவென நின்றமத வாரணமும் - சித்துபெறு

111. மிஞ்சு தபோதனர்கள் மெய்க்குளிகை யுற்றிருக்கும்
பஞ்சவர்னமான பழங்கூவம் - கஞ்சமலர்

112. சீரா யுறைபெரிய தெப்பக் குளத்தருகிற்
காரானை மாமுகனைக் கைதொழுது - தார்சோலை

113. யுற்றபுகழ் ராசைபுரத் தோங்குமுத்துக் குஞ்சாமும்
சொற்றிகழ் நல்லம்மன் துரைராசர் - நற்பதமுங்

114. கண்ணனூர் மாரி கமலபதமும் போற்றும்
புண்ணியனே ராசனருள் புத்திரனே - பண்ணிசைந்த

115 நாவலருக் கன்றரக நன்மணியை யேகொடுத்த
தேவதரு வாய்வந்த சீமானே - பூவுலகில்

116 சேமூர் தலைசைவரு தீரா கனயோகா
பூமாது வாழுநகை யாபுரிவாழ் - கோவேமுன்

117. அந்நாளிற் கம்பர்க் கடிமைமுறி யேகொடுத்த
மன்னு நல்லய்ய மகிபாலா - பொன்னுன

118. நீலி பலிதவிர்த்து நித்தருண வன்னமருள்
மாலே நல்லய்ய மதியூகா - சூலி

119. முதுகிற் சுடுசோறு மூன்னுளிற்றந்த
நதிகுலத்தில் வந்துதித்த நல்லயனே - மதிசேர்

120. புகழ்விளங்கு ராசை புரத்திலொரு கூபம்
மகிமைபெறு நந்தா வனமுஞ் - சுகமளிக்குந்

121. தண்டலைசளும் வில்லைச் சாவடியு முன்செய்த
மண்டலிகா நல்லய்ய மன்னவனே - கொண்டலெனு

122 அந்தணர்க்குஞ் சங்கமர்க்கு மாதுலர் யாவர்க்குமனந்
தந்தருள் நல்லய்ய தயாபரனே - சந்ததமும்

123. இந்தத்தெய்வங்க ளெல்லா மின்புறவே யன்புசெய்து
வந்துற் றுணைகாக்க வையகத்தில் - முந்து

124. பிறையா யிரந்தொழுது பேருலகிற் செல்வ
நிறையாய்த்திருவருளு நீங்கா - திறையாக

125. ஊழிநெடுங்கால முற்றுலகெ லாந்துதிக்க
வாழியென வாழ்வாய் மகிழ்ந்து.

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்செங்கோடு

# பணிமலைகாவலர் அபிஷேகமாலை.

17105

செஞ்சொல்பெறுகச்சிநகர் விட்டகன்றே கொங்கு
தேசத்திலெய்துமனதாய்த்
திறல்வீரரானவீ மணனேபணன்னிரங்
கணன்மூவருஞ்சேனையுய

கொஞ்சுகிளி முத்தம்மை பவளம்மையோபம்மை
குலவுகன்னியருமுறமேவ
கோதைத்தலந்தன்னில் வந்துசெங்கோடரைக்
கும்பிட்டுவாழும்நாளில்

மிஞ்சுபுலியடரவரு மசுவபதிகஜபதியை
வெட்டிரணகளமாக்கியே
மேன்மைபெறுநாககிரி யழியாதவகைசெய்து
வீரசொர்க்கம்பெற்றதால்

92'417 N4

அஞ்சலென வரமுதவு மர்த்தநாரீசர் பத
மன்பாகவேதுதிக்கும்
அணிமலைத்திரள்புய ப்பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (1)

தாகமுறவேயுமது சந்நிதியின்முன்வந்து
சனிவாரசேவைசெய்தோர்
தாரித்திரந்தனிற் சிக்காமலளவற்ற
சம்பத்தெலாமெய்துவர்

நாகரிகமாக வெண்டிருநீறு வாங்கிநுதல்
நன்குபெறுமாறணிந்தால்.
நாவலந்தீவுதனை யொருகுடைக்கீழாக
நண்ணுமரசுற்றுளுவர்

கோதையர்களன்பிலும் பிரசாதமுட்கொளிற்
சுதர்பலரை ஈன்றுவாழ்வர்
சுமுகவுன்மகிமைப் புடவிதனிலொருவரால்
சொல்லுதற்கெளிதாகுமோ

ஆகமும்பெறுகோதை யர்த்தநாரீசர்பத
மன்பாகவேதுதிக்கும்
அணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (2)

மண்டலந்தனிலுங்கள் மகிமைதனையேகண்டு
மறைவலோர்முடிமன்னரும்
வண்மைபெறுவைசியசூத்திர ஜாதிசங்கரரு
மற்றுமுள்ளோரனைவரும்

தெண்டிரைக்கடல்போல வந்தடிபணிந்தன்பு
சேரநின்றவசமாகிச்
சீராகவபிஷேகமாதியாங் கட்டளைகள்
சிந்தையுருகிச்செய்திடந்

தண்டமிழ்க்கவிதைபெறு கொங்கினிற்புலமைபுரி
சதுரர்புலியூராதிபச்
சைவர்வெகுபத்தியாய்ப் பூசனையியற்றச்
சதாகால சாந்நித்தியமாய்

அண்டர்தருவளர்கோதை யர்த்தநாரீசர்பத
மன்பாகவேதுதிக்கும்
அணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (3)

சீர்பரவுபூந்துறைசை நாட்டினுயர்மோரூர்ச்
சிறந்தகாங்கயவர்க்கமும்
செல்வமிகுதென் முளசைமேவைநகரன்னத்
தியாகர்மரபின்குழாமும்

பார்பரவுராசிபுர நாட்டிமைபடைத்தோர்
பருத்திநன்னாட்டவர்களும்
பங்கயத்தடவாளே சூழரயநாடரும்
பட்சமிகுசேலநாட்டார்

ஏர்பரவுமேழூரு நாட்டினுக்கதிபர்களு
மினியபூவாளிநாட
ரிருபத்துநாலுடுதனிலுள்ள குடியெலா
மேத்தியுமைவந்துபோற்ற

ஆர்பரவுவேணியுமை பாகர்வேலவர்பாதம்
அன்பாகவேதுதிக்கும்
அணிமலைத்திரள்புயப் பணிமலைக்கவலர்கள்
அபிஷேகமாடியருளே. (4)

கந்தமிகுதிலதைல பஞ்சகௌவியங்களுங்
கதலிதேமாபலாவுங்
கனமான எலுமிச்சைதமரத்தை யிளநீர்
கரும்பிரசமும் பால்தயிர்

கொந்துலவுபூநெய்தேன் சர்க்கரை திராட்சியுங்
குமுகுமெனுமஞ்சள்வகையுங்
குளிர்மருவு சந்தனங் காவேரிமஞ்சனங்
குங்குமப்புனுகுபனிநீர்

விந்தைமிகுமாடையாபரண மாலிகைதூப
மேவுதாம்பூலதீபம்
விற்பனமதாமுங்கள் சந்நிதியிலடியவர்கள்
வேண்டியிவைகொண்டேத்தவே

அந்தமிகுசெங்கோடை யர்த்தநாரீசர்பத
மன்பாகவேதுதிக்கு
மணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (6)

மங்களமிலங்குமது சந்நிதியடைந்தன்பு
வண்மைபெற்றுப்பணிந்து
மாமகிமையூட்டஞ்செய் நான்குதினமுன்னமே
வரிசைபெறுமுளைதெளித்துப்

புங்கமிகுமக்காரவடிசில் பணியாரம்வெண்
பொங்கல்வகைசீடைவடையும்
பொடியமைத்திட்ட சுருள்வீமபாகத்தின்வகை
போதைமது சுடுவான்களும்

இங்கிதம்பெறு கொழுக்கட்டையுடன்மிளகுசுக்
கேலவெல்லம்ஞுனுக்கி
இதமுறக்கூட்டி நற்பாவாடைநைவேத்ய
மிட்டுநற்பத்தர்பரவ

அங்கமலவாவிதிகழ் செங்கோடையீசர்பத
மன்பாகவேதுதிக்கு
மணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (6)

பட்டின்மாசல்லடம் நிசார்கபாய்கச்சையும்
பருதியொளிதிகழ்பாகையும்
பரவுமெழின்முத்துத்துராய் சவுக்கிளியாதி
பைம்பொனாபரணவகையுங்

கொட்டமிடுதுட்டர்களை வெட்டிவருகட்டாரி
குலவுவளைதடிசக்கரங்
கூர்பரவுகேரிசக் கையம்புசரிகையுங்
கோலமுடனேயணிந்து

திட்டமிகுபரிமீதி லிடசாரிவலசாரி
செங்கோட்டுவீதிதன்னிற்
சீராககலபவனி வருவதைக்கண்டவர்கள்
ஜெயஜெயவெனப்போற்றிட

அஷ்டதிசையோர்பரவு மர்த்தநாரீசர்பத
மன்பாகவேதுதிக்கு
மணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (7)

மனமருவுகோதை நகர் வரிசையுடன்வாழ்குக
மன்னவர்கள்பதிவாழ்குக
மாகனஸ்தானீகர் சகலரும்வாழ்குக
மறையோர்கள்மிகவாழ்குக

கனமருவுமேழுகரை நாட்டார்கள்வாழ்குக
கதிமைசேர்குடிவாழ்குக
கருதுமற்றவர்களும் மணியஞ்செய்வோர்களும்
கருணீகர்களும்வாழ்குக

தினமருவுமுன்றனைப்பூசை புரிவோரதிக
செல்வமுடனேவாழ்குக
சீரானபரிசனர்கள் தளியிலுள்ளோர்களுஞ்
செங்குந்தர்களும் வாழ்குக

அனமருவுசெங்கோடை யர்த்தநாரீசர்பத
மன்பாகவேதுதிக்கும்
அணிமலைத்திரள்புயப் பணிமலைக்காவலர்கள்
அபிஷேகமாடியருளே. (8)

முற்றிற்று.

Q2:417
N4
600 008
171.075

உ

சிவமயம்.

# விளம்பரம்.

இப்புத்தகம் திருச்செங்கோடு சைவ சமாஜத்தில் விலைக்கு கிடைக்கும். இதன் இலாபம் ஷை சமாஜத்துக்கு உரியது. விரைவில் வெளிவரும்.

## சிறுபுத்தகங்களாவன.

திருச்செங்கோட்டுப் பிள்ளைத்தமிழ்.

ஸ்ரீ அர்த்தநாரீசுரர் பதிகம்.

வருகைப்பதிகம்.

சதகம்.